# காத்தவராயர் மான்மியம்

அல்வாய் வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தான

50/- வருடாந்த உற்சவ கால ஆன்மிக இதழ் 2021



உ



அல்வாயூர் எல்லையிலே இனிதமரும் குலதெய்வம்
பல்காலும் எல்லவர்க்கும் அருள் தெய்வம் - வல்லோனாய்
திரோதான சக்திதரும் காத்தான் உடனுறையும்
வரசித்தி விநாயகரை வாழ்த்து

- த.கலாமணி

**இதழ் - 2** **காத்தவராயர் மான்மியம்** **2021**

வருடாந்த உற்சவ கால ஆன்மிக இதழ்

அல்வாய் ஊர் எல்லையில் வீற்றிருந்து எம் ஊரவர்கள் அனைவரையும் காத்து நிற்கும் வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் பாதங்களை வணங்குகின்றோம். 2021 ஆம் ஆண்டு கொவிட் - 19 பிரச்சினைகளுக்குள்ளும் எம்பெருமானின் திருவருளால் எமது ஆலய விழாக்கள் சிறப்பாக நடைபெறு வதையிட்டு மகிழ்வடைகின்றோம். காத்தவராயரின் ஆலய வளர்ச்சியானது எம் ஊரவர்கள் அனைவரினதும் ஒன்றிணைவினால் ஏற்பட்டு வருகின்றது. நம்பியோரை கைவிடாது அவர்களுக்கு வேண்டியதை வழங்கி வருபவர் எமது காத்தவராயர். திருவெம்பாவை, நவராத்திரி, 12 பூசம் - பூசை, ஆனி உத்தரம், திருவிழா, அன்னதானம் என எமது ஆலய விழாக்கள் இறைவன் திருவருளோடு சிறப்புற நடைபெற்று வருகின்றது. ஆலய விழாக்களை சிறப்பாக நடாத்துவதற்கு சகல வழிகளிலும் உதவி வரும் அனைவருக்கும் எம் ஆலயம் சார்ந்த நன்றிகளைத் தெரிவித்து கொள்கின்றோம். இந்த வருட திருவிழா கொவிட் - 19 காரணமாக மிக அமைதியாக நடைபெறுகிறது.. இந்த வருட திருவிழாவை முன்னிட்டு எமது ஆலய மெய்யடியார் சு.நிருத்திகன் நினைவாக “சு.நிருத்திகன் சிறுவர் பூங்கா” அமைக்கப் பட்டுள்ளதோடு, வடக்கு, கிழக்கு பக்க வெளிவீதி சுற்றுமதிலும் கட்டப்பட்டுள்ளது. எந்த இடரிலும் காத்தானை தரிசித்து நன்மை பெற்றுக் கொள்ளுங்கள். உங்களைக் காக்க வந்தவனே எங்கள் காத்தவராயன்.

- க.பரணீதரன்

ஆசிரியர் : க.பரணீதரன்
வெளியீடு : காத்தவராயர் தேவஸ்தானம்
தொடர்பு : கலைஅகம், அல்வாய்
தொலைபேசி:0775991949 FB : அல்வாய் காத்தவராயர்

- க.பரணீதரன்

# சைவசமயிகள் வாழ்வும் தீட்சையும்

சைவ சமயத்தின் வழி நடப்பவர்கள் அனைவரும் தீட்சை பெற்றிருப்பது நன்மை பயக்கத்தக்கதாகும். எம் முன்னோர்கள் பலர் தீட்சை பெற்று, சைவசமய விரத அனுஷ்டானங்களை சரியான வகையில் மேற்கொண்டு இறைவனுக்கு உண்மையானவர்களாக வாழ்ந்து வந்தார்கள். தீட்சை பெறுவதை பெரும் பாக்கியமாக கருதி பலர் தீட்சை பெற்று, திருவிழா, கோயில் சார்ந்த விசேட நாட்களில் தீட்சை அணிந்து கொள்வார்கள். ஆனால் இன்று தீட்சை தரிப்பவர்கள் மிக அருகிக் கொண்டே செல்கின்றனர்.. அந்த வகையில் தீட்சையின் முக்கியம் பற்றிய அறிமுகக் கட்டுரையாக இது அமைகின்றது.

தீட்சை என்றால் உயிரைப்பற்றிய ஆணவ மலத்தைக் கெடுத்து சிவஞானத்தை கொடுப்பது என்று பொருள். தமிழில் தீக்கை. உடலுக்கு பலசடங்குகள் செய்யப்படுகின்றன அது போல உயிராகிய ஆன்மாவிற்கு செய்யக்கூடிய சடங்கே தீட்சை. எந்த வயதினரும் (7வயது முதல்) எந்த வயதிலும் ஆண் பெண் இரு பாலரும் தீட்சை பெறலாம். "அஞ்ஞானத்தைப் போக்கி, மெஞ் ஞானத்தைத் தருவது" தீட்சை என்று பொருள் தருகின்றது. "தீட்சை" என்பது "தீஷா" எனும் வட மொழிச் சொல்லில் இருந்து மருவியது. "தீ" என்பது தருதல் எனவும், ஷா என்பது நீங்குதல் என்றும் அமைகின்றது. சைவ மக்கள் சைவ சமய ஆசாரங்களை அனுஷ்டிப்பதற்கு வேண்டிய தகுதியினை அளப்பது தீட்சை ஆகும். அத்தீட்சையை அளக்கின்ற சிவாச்சாரியார் மேல்வரும் நான்கு தகுதிகளைக் கொண்டவராக இருக்க வேண்டும் எனச் சிவாகமங்கள் கூறுகின்றன. அவையாவன : சமய தீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை, ஆச்சாரிய அபிடேகம் என்பனவாகும்.

சைவ சமயியாகும் உரிமையைத் தருவது சமய தீட்சை எனப்படுகிறது. சமய தீட்சை பெற்றவன் "சமயி" எனப் பெயர் பெறுகின்றான். சமய தீட்சை பெறுவதால் சிவனின் சிறப்பு மூலமந்திரமாகிய திருவைந்தெழுத்தை (சிவாய நம என்னும் பஞ்சாட்சரத்தை) ஸ்தூலமாக உணர்ந்து கணிக்கும் உரிமையும், சிவாகமங்களை ஓதி உணரும் உரிமையும் அவ்வாகமங்கள் கூறும் சரியா பாதத்தில் நிற்கும் உரிமையும் கிட்டும். இதன் மூலம் சிவனின் முதன்மையை ஒரு வாறு உணரும் நிலை உண்டாகும். சிவலிங்க பூசை செய்வதற்கான தகுதியளிப்பது விசேட தீட்சை எனப்படும். சமய தீட்சையும் விசேட தீட்சையும் பெற்றவர்கள் இறுதியாக பெறும் தீட்சை நிர்வாண தீட்சை எனப்படும். நிர்வாண தீட்சை இரு வகைப்படும். அவையாவன : சத்தியோ நிர்வாண தீட்சை, அசத்தியோ நிர்வாண தீட்சை என்பனவாகும். சைவசமயிகள் அனைவரும் சமய தீட்சை பெறுவதன் மூலம் நமது சமய மரபுகள் பாதுகாக்கப்படுவதுடன், நற்குணங்கள் தோன்றும்.

கலாநிதி த.கலாமணி

# அல்வாய் அருள்மிகு வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தான திருத்தல வரலாறு

எமது அல்வாய்க்கிராமத்தின் வடபால் எல்லையில் அமைந்திருக்கும் ஆலயமே "அருள்மிகு வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தானம்". இன்று புதுப்பொலிவுடன் அலங்கார உற்சவமும் காணும் இந்த ஆலயம் இருநூறு வருடங்களுக்கும் மேலான தொன்மை உடையது. பிதிர் வழியாக ஆறு தலை முறைகளாக குலதெய்வமாக ஆதரிக்கப்பட்டு, வழிபடப்பட்டு வரப்படும் "காத்தவ ராயர்", வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயராக மாற்றம் கண்டிருப்பதானது கால மாற்றத்தினாலாகும். ஆனாலும் காத்தவராயரின் தெய்வீகத்தன்மை அரசோச்சும் விதமாக ஆலயம் பேணப்பட்டு வருவது காத்தவராயரின் அருளாச்சிச் சிறப்பினாலாகும்.

எங்கள் குலதெய்வமாக என்றும் விளங்கும் காத்தவராயர் கோயிலின் தோற்றத்திற்குக் காரணகர்த்தர் எமது பிதிர் வழியான ஆறுதலைமுறைத் தொடர்ச்சியின் முதல்வரான கதிரன் ஆவார். 1800 களின் முற்கூறில் பிறந்த இவர் எழுத்தறிவுள்ளவராக விளங்கியதோடு, சமய அனுட்டானங்கள், புராணக்கதைகள் என்பவற்றைத் தெரிந்தவராகவும் இருந்தார். எமது கிராமத்தின் எழுத்தறிவுப் பாரம்பரியத்தின் தொடக்கப் புள்ளிகளில் ஒருவராக, முதன்மையானவராக இவர் விளங்கியிருக்க வேண்டும் என்பதை இவரின் வாழ்வே நிரூபணம் செய்கிறது. இவர் தனது ஆண் பிள்ளைகளுக்கு காத்தான், வேலன் என்றே பெயரிட்டார். காத்தான் அவர்கள் சிறந்த நாட்டுக்கூத்துக் கலைஞராக விளங்கினார் என்பதற்கு ஆதாரங்கள் உண்டு. வேலன் அவர்கள் கல்வியிற் சிறந்து எமது ஊரின் முதலாவது சட்டம்பியார் ஆனதோடு, சோதிடத்திலும் வல்லவராக சிறப்புப் பெயர்களால் சுட்டப்பட்டு வந்தார்.

கதிரன் அவர்கள் காத்தவராயரைக் குலதெய்வமாகக் கொண்டமைக்கு, அவர் தொழில் நிமித்தம் அயலூர்த் தொடர்புடையவராகவும் கலைகளிலே ஆர்வமுள்ளவராகவும், குறிப்பாக கூத்துக்கள் நடைபெறும் இடங்களுக்குச் சென்று அவற்றைக் கண்டு களித்து வந்தவராகவும் இருந்தமையே காரணம். இவ்வாறு அவர் பார்த்த கூத்துக்களிலே சிந்து நடைக்கூத்தான "காத்தவராயன் கூத்து" கதிரன் அவர்களைக் கவர்ந்தது. பெருகி வரும் கங்கை ஆற்றைத் தனது ஒற்றைக் காலால் தடுத்து நிறுத்தி முத்துமாரி அம்மனைக் காத்த பாலன் கதிரனின் நெஞ்சில் நிறைந் தான். தனது பாலன் கங்கையிடமிருந்து காத்தமையால் "காத்தான்" என்று முத்துமாரியே அவனுக்குப் பெயரிட்ட காட்சியைப் பல மேடைகளிலும் கண்டு களித்த

கதிரன் அவர்கள் காத்தானையே தமது குலதெய்வமாக வரித்துக் கொண்டார். அதேவேளை, அதேகாலப்பகுதிக்குச் சற்று முன்பாக நிறுவப்பட்டிருந்த அல்வாய் வேலிலந்தை முத்துமாரி அம்மன் கோயிலும் கதிரன் அவர்கள் வணங்கும் தலமாக இருந்தது.

அல்வாய் முத்துமாரி அம்மன் நிறுவப்பட்டிருந்த வேலிலந்தைக்காணி கதிரன் அவர்களும் அவர் தம் உறவினர்களும் வாழ்ந்த வந்த குடியிருப்புப் பகுதிக்கு ஈசானத்திசையில் கூப்பிடு தொலைவில்(சுமார் 300 மீற்றர் தூரத்தில்) அமைந் திருந்தது. அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் கோயிலின் தோற்றம் பற்றி வரலாற்றுக் கதை ஒன்றுண்டு. அந்நாளில் தமிழர் பிரதேசத்தை வன்னி மன்னர் ஆட்சி செய்தவேளை நில உடைமையாளர்களுள் ஒருவராக இருந்த மணிவீரபாகு தேவன் அவர்களின் மரபிலே தோன்றிய வீரமாப்பாண முதலியாரின் மகளான உடைச்சி வள்ளி நாச்சியார் அவர்கள் வாழ்ந்த காலத்தில் “அக்கம்மா என்ற பெண் தெய்வத்தின் மாயங்கள் பற்றியும் அதித சக்தி பற்றியும் பேசப்பட்டு வந்தது. வள்ளி ா நாச்சி சக்தி வழிபாட்டில் அதிக ஈடுபாடு கொண்டவராகவும் ஆண்டு தோறும் மதுரை மீனாட்சிஅம்மன் கோயிலுக்குச் சென்ற வருபவராகவும் இருந்தார். ஒரு சமயம் அங்கிரந்து அம்மன் சிலை ஒன்றை வாங்கி வந்து தன் வீட்டில் வைத்து வள்ளி நாச்சி வணங்கி வந்தவேளை, அவரது கனவில் தோன்றிய மூதாட்டி ஒருவர் வேம்பும் இலந்தையும் இணைந்திருக்கும் வேவிலந்தைக்காணியிலே தம்மை இருத்தி வழிபட்டு வருமாறு கூறினாராம். காத்தான் கூத்தை விரும்பிப் பார்த்து வந்த வள்ளி நாச்சி ஏற்கெனவே மாயக்கை எனும் இடத்திலிருந்த “மாய அக்கையை“(அக்கம்மா எனும் பெண் தெய்வம்) தவறாது வணங்கி வந்தவர். காத்தான் கூத்தில் சித்திரிக்கப்படும் முத்துமாரி அம்மன் வெப்பு நோய்களைத் தீர்க்கும் தெய்வமாக உணர்த்தப்பட்டதனால் முத்துமாரி அம்மன் மீது ஆராக்காதல் கொண்டிருந்தார். எனவேதான் முத்துமாரி அம்மனுக்கு கோயில் ஒன்றை நிறுவ வேண்டும் என்ற விருப்பம் கொண்டவராகவும் இருந்தார். அவரது கனவில் தோன்றிய மூதாட்டி, வேம்பு தான் சக்தி என்றும் இலந்தை தான் சிவம் என்றும் கூறி சிவமும் சக்தியும் இணைந்திருந்த வேலிலந்தைக் காணியிலேயே தனக்குக் கோயில் அமைக்கு மாறும் கேட்டிருந்ததனால் தமக்குச் சொந்தமான வேவிலந்தைக் காணியில் ஒரு கொட்டில் அமைத்து, மதுரையிலிருந்த கொண்ட வந்திருந்த அம்மன் சிலையை வைத்து விளக்கு வைத்து வணங்கி வந்தார். வள்ளி நாச்சியின் கனாத்திறனின் பேறாக உருவான வேவிலந்தை முத்துமாரி அம்மனை ஊரவரும் அயலூரவரும் நெஞ்சார வணங்கி வந்தனர். இந்தக் கோயிலில் நாளடைவில் அம்மனோடு சேர்ந்து சூல வடிவில் காத்தானையும் நிறுவி வணங்கி வரும் வழக்கம் தொடர்ந்தது.

இவ்வரலாறுகளை அறிந்திருந்த கதிரன் அவர்கள் தாமும் உறவினர் களும் குடியிருந்த காணிப்பகுதியில் சூலங்களில் உருவேற்றிய காத்தானையும் பணிக்கரையும் ஒதியமரம் ஒன்றின் கீழ் நிறுவி வணங்கி வரத் தொடங்கினார்.

காலகதியில் திருத்தண்டில் உருவேற்றிய ஆதி விநாயகரும் வழிபாட்டுக்குரியவரானார். இத்தெய்வங்களுக்கு விளக்க வைத்து ஆனி உத்தரத்தின்போது மடையும் படைக்கப்பட்டது. கதிரன் அவர்களும் அவரின் பிள்ளைகளான காத்தான், வேலன்(வேலுச்சோதிடர்) ஆகியோரும் விளக்கு வைத்து வந்தனர். பின்பு வேலுச் சோதிடரின் மகனாக தம்பையாச் சோதிடரும் காத்தானின் மகனான சபாபதியும் விளக்கு வைத்தனர். ஆனால், அதன் பின்னர் கதிரனின் பரம்பரைத் தொடர்ச்சியில் சபாபதியின் மக்களான தியாக, சிவகுரு, தம்பிஐயா ஆகியோர் விளக்கு வைத்து வந்தனர். இக்காலத்தில் ஒதிய மரத்தின் கீழ் நிறுவப்பட்டிருந்த தெய்வங்களுக்குக் கொட்டில் அமைத்து பின்பு சுண்ணாம்பினாலான கட்டடம் அமைக்கப்பட்டது. கதிரனின் பிதிர் வழி உறவினர்க்கும் ஏனைய உறவினர்க்கும் திருவெம்பாவைப் பூஜைகள் பகிர்ந்தளிக்கப்பட்டு ஆண்டு தோறும் திருவெம்பாவை சிறப்பாகக் கொண்டாடப்பட்டு நித்திய விளக்கும் நித்தியப் பூஜையும் ஆனி உத்தரப் பொங்கலும் திருவெம்பாவைப் பூஜைகளும் இடம்பெற்று வந்தவேளை இவற்றுக்கான பொறுப்பு தம்பிஐயா அவர்களிடமே கையளிக்கப்பட்டிருந்தது. சுண்ணாம்புக் கட்டடம் இரு மண்டபங்கள் கொண்ட சீமேந்துக் கட்டடமாக மாற்றப்பட்டது. தம்பிஐயா அவர்களைத் தொடர்ந்த தம்பிஐயாவின் மகனான நானும்(கலாமணி) என்னைத் தொடர்ந்து என் மகனான பரணீதரனும் காத்தானுக்குப் பூஜை செய்து கோயிலைப் பரிபாலனம் செய்யும் பேறு பெற்றோம். இரண்டு மண்டபங்களுடன் கூடிய காத்தான் கோயிலை விஸ்தரித்து இன்று மணிக்கோபுரம் காணப்படும் எல்லை வரை மண்டபங்களை அமைக்க வேண்டும் என்ற கனவு என் தந்தையிடம் இருந்தது. அவரின் அந்திம காலத்தில் என் தங்கை கீதாமணியிடம் அக்கனவு பற்றிக் கூறியிருந்தார்.

எனக்கும் காத்தான் கோயிலைப் புனரமைக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அல்வாய் சாமணந்தறைப் பிள்ளையார் கோயிலின் குருக்களாக இருந்த சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்த ராஜாக் குருக்கள்(கண்ணன் ஐயா) மாபலிபுரத்திலிருந்து எடுத்து வந்திருந்த ஐந்து விநாயகர் விக்கிரகங்களுள் ஒன்றை 2003 ஆம் ஆண்டில் பரணீதரனிடம் கையளித்தார். அன்று முதல் சுமார் எட்டு வருடங்களாக எமது வீட்டில் வைத்துப் பூசிக்கப்பட்டது. 2011 ஆம் அண்டு தைப்பூசத்தினத்தன்று கோயிலைப் புனரமைப்பதற்காக புதிய கட்டடத்திற்கான அத்திபாரக்கல் இடப்பட்டது. காத்தானின் அருளால் குறுகிய காலத்திலேயே கட்டட வேலைகள் பூர்த்தியாகி 06.06.2011 இல் மஹா கும்பாபிஷேகம் இடம் பெற்றது. மூலஸ்தானத்திலே மாபலிபுரத்திலிருந்து கொண்டு வரப்பட்ட வரசித்தி விநாயகர் விக்கிரகம் ஸ்தாபிக்கப்பட்டு ஆதி விநாயகர் திருத்தண்டும் மூலஸ்தானத்திலேயே நிறுவப்பட்டது. ஐந்து மாதங்களாக பாலாலயத்தில் வைக்கப்பட்டிருந்த காத்தவராயர், பணிக்கர் திருத்தண்டுகள் மூன்றாவது மண்டபத்தில் நிறுவப்பட்டன. இவ்வாறாக ஆலயத்தைப் புனரமைத்தபோது பீடம், நிலையம், அளவுப்பிரமாணங்கள் யாவும்

வரசித்தி விநாயகர் விக்கிரகப் பிரமாணத்துக்கு அமைய சைவப்புலவர் சோதிடர் சிவஸ்ரீ ம.ச.சுப்பிரமணியக் குருக்கள் அவர்களாலேயே நிர்ணயிக்கப்பட்டன.

எங்கள் குலதெய்வமான காத்தானின் பெயர் துலங்க ஆலயத்திற்குப் பெயரிடவேண்டும் என்ற எங்கள் விருப்பின் பெயரில் "அருள்மிகு வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தானம்" என்ற பெயர் சிவஸ்ரீ தியாக.சோமாஸ் கந்தராஜாக் குருக்களின் ஆலோசனையுடன் சூட்டப்பட்டது. கும்பாபிஷேகத்தை சிவஸ்ரீ சோமாஸ் கந்த ராஜாக் குருக்களே சிறப்பாக நிறைவேற்றித் தந்தார். எனது மகன் பரணீதரன் அர்ச்சகராகப் பொறுப்பேறறு ஆலயத்தின் பரிபாலனத்தையும் ஏற்றுக் கொண்டார்.

பரணீதரன் இத்தேவஸ்தானத்தை மேலும் மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற இலட்சியத்துடன் விளங்கி, 2019 இல் அலங்கார உற்சவம் செய்வதற்கான ஏற்பாடுகளை செய்தார். ஐந்தாவது உள் மண்டபமும் வசந்த மண்டபமும் வைரவர் ஆலயமும் மகாவிஷ்ணு ஆலயமும் நிறுவப்பட்டு, ஆவணி மாத பூசத்தினத்தை தீர்த்தோற்சவ நாளாகக் கொண்டு, எமது ஊரவரான உறவினர்களுக்கு பத்துத் திருவிழாக்களும் பகிர்ந்தளிக்கப்பட்டு அலங்கார உற்சவம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தொடர்ந்து 2020, 2021 ஆகிய ஆண்டுகளிலும் ஆலயத்தில் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டு, அலங்கார உற்சவம் தொடர்ச்சியாக ஆண்டு தோறும் இடம்பெற்று வருகிறது. திருவிழாக்காலங்களில் மட்டும் சைவக்குருக்கள் ஒருவர் பூஜைக்கென அழைக்கப்படுவதோடு, நித்திய பூஜைகளும், விசேட பூஜைகளும் பரணீதரன் அவர்களாலேயே நிறைவேற்றப்பட்டு வருகின்றன. பரணீதரன் அவர்கள் சைவராகி சமயதீட்சையும் பெற்றவர். மாதாந்த பூசம், நவராத்திரி போன்ற பூஜைகளும் உறவினர்களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டு கொண்டாடப்பட்டு வருகின்றன.

எங்கள் முப்பாட்டன் கதிரன் அவர்களால் ஏறத்தாழ இருநூறு ஆண்டு களுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்ட காத்தான் வழிபாடு 2011 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் வரை விளக்கு வைத்தல், நித்திய விளக்கு வைத்தலுடன் பூஜையும் செய்தல் ஆகியவற்றோடு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததனால், எமது உறவினர்களும் ஊரவர் களும் என பலர் எங்கள் சந்ததியினர்க்கு துடக்கு ஏற்பட்ட காலங்களில் விளக்கு வைக்கும் பேறு பெற்றனர். குறிப்பாக, க.மார்க்கண்டு, அவரின் பிள்ளைகள் நகுலேஸ்வரன். கலாநிதி, சி.பரஞ்சோதி, மா.சிவதாசன், மா.கருணாநிதி, க.மகேசன், சி.விக்னேஸ்வரன், க.கமலேந்திரன் ஆகியோர் விளக்கு வைத்துள்ளனர். இப்பட்டியலில் மேலும் பலரை உள்ளடக்கலாம்; அவர்கள் குறித்த ஒரு நாள் அல்லது சில நாட்கள் விளக்கு வைத்துள்ளார்கள். அதேவேளை, கதிரன் அவர்களின் பரம்பரைத் தொடர்ச்சியில், ஒவ்வொருவரதும் பிள்ளைகளுக்கும் அவர்கள் திருமணம் செய்யாமல் சிறுவர்களாகவும் இளைஞர்களாகவும் இருக்கும் வரை காத்தானுக்கு விளக்கு வைத்திருக்கின்றார்கள். இவ்வகையில் கதிரன்

அவர்களும் கதிரன் அவர்களின் பிள்ளைகளான காத்தார், வேலன் ஆகியோரும் காத்தாரின் பிள்ளைகளான சபாபதி, கதிர்காமு, சுந்தரம் ஆகியோரும் வேலனின் பிள்ளைகளான தம்பையாவும் சபாபதியின் பிள்ளைகளான தியாகு, சிவகுரு, தம்பிஐயா அகியோரும். தம்பி ஐயாவின் பிள்ளையான நானும்(கலாமணி) எனது பிள்ளைகளான பரணீதரன், முரளீதரன், மதனாஹரன் ஆகியோரும் காத்தானுக்கு விளக்கு வைத்து வந்த, எமது சந்ததியிலுள்ளவர்கள் ஆவர். 2011 ஆம் ஆண்டு மூலஸ்தானத்தில் வரசித்தி விநாயகர் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்ட பின்னர் மூலஸ்தானத்திற்குள் செல்லும் பேற்றை பரணீதரன் பெற்று அவரே தொடர்ந்து எமது நித்திய, விசேட பூசைகளின் அர்ச்சகராக இருந்து வருகின்றார். அத்துடன் அனைத்து விதமான கோயில் சார்ந்த தீர்மானங்களையும் எல்லோருக்கும் பொதுவானதாக எல்லோரையும் இறைவன் சந்நிதானத்தில் சமமாக மதித்து உறவினர்களை அரவணைத்து கோயில் விழாக்கள், திருப்பணிகளை மேற்கொண்டும் வருகின்றார். ஆனிஉத்தரப் பொங்கல் தினத்தன்று "காத்தான் கூத்து"(சிந்து நடைக் கூத்து) அண்மைக் காலமாக கோயிலில் மேடையேற்றப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. மிருக வேட்டைக்காக எமது சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலயத்திற்கு சென்று வருகின்றார் எமது வரசித்தி விநாயகர். மேலும் திருவிழாக் காலங்களில் சமய சொற்பொழிவுகள், கலை நிகழ்வுகள் இடம்பெற்று வருவதுடன் "காத்தவராயர் மான்மியம்" என்னும் சஞ்சிகையும் வெளியிடப்பட்டு வருகின்றது. இவ்ஆலயத்திற்கான திருவூஞ்சல் என்னால்(கலாமணி) பாடப்பட்டுள்ளது.

இவ்வாறாக ஏறத்தாழ நூற்றியெழுபத்தைந்து வருடங்களாக விளக்கு வைத்தலுடனும் ஆனி உத்தரப் பொங்கலுடனும் திருவெம்பாவைப் பூஜை களுடனும் படிப்படியாக அபிவிருத்தி கண்டு வந்த காத்தான் கோயில், 2011 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை "அருள்மிகு வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தானம்" என்ற பெயரில் பெரு வளர்ச்சி கண்டிருப்பது காத்தானின் மகிமையன்றி வேறில்லை. மேலும் மேலும் எமது ஆலயம் வளர்ச்சிபெற வரசித்தி விநாயகரதும் காத்தானதும் திருவருள் எமக்குத் துணை நிற்கும்.

**விஜயநாதன் செந்தூரன்**
தலைவர்,
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துறை
வவுனியாப் பல்கலைக்கழகம்

# விநாயகர் உருவ தத்துவமும் தொழில்நுட்பமும்

கலியுகத்தில் விநாயகப் பெருமானுடைய வழிபாடு முக்கியமானதொன்றாக விளங்குகிறது. முழுமுதல் கடவுளாகிய கணபதியை வணங்கிய பின்னரே அனைத்துக் காரியங்களையும் தொடங்குகின்ற பாங்கு இந்துக்களாகிய எம்மிடத்தே காணப்படுகின்றது. கல்விக்கு அதிபதியாக சர்வ வித்யா கணபதி மூர்த்தமாக காட்சி தரும் விநாயகரின் அருளாசிகள் இயற்கை நுண்ணறிவை மெருகூட்டும் என்றால் அது மிகையாகாது.

முழுமுதல் கடவுளாம் கணபதியின் செயல்பாட்டு தத்துவம் கணினி செயற்பாட்டின் தத்துவத்தோடு சார்ந்து போகின்ற தன்மை கருத்திலெடுக்கப்பட வேண்டியதொன்றாகும். விநாயகர் ஆன்மிக பிரபஞ்சத்தின் கணினியாக உருவகம் பெறுகிறார் என்றால் அது ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட வேண்டியதொன்றாக உள்ளது.

ஒரு கணினியின் செயற்பாட்டை பொறுத்த வரையிலே முதன்மை சர்வர்(Server) அல்லது மதர்போட்டு(Mother board), எண்கள் மற்றும் இலக்கங்கள்(Digits), முதன்மை நினைவக தட்டு(Hard disk), செயலி(Processor), தற்காலிக நினைவகம்(Ram) ஆகியன கணினியின் பெரிய திறன் வேகம் மற்றும் செயற்பாட்டில் அதிக பங்கு வகிக்கின்றன. விநாயகரின் உருவம் கணினியின் மதர்போர்ட்டோடு ஒப்பீடு செய்யப்படுகின்றது. கணினியில் அனைத்து செயற்பாடு களையும் கட்டுப்படுத்தும் மதர்போர்ட் போல இருகரம் கூப்பி விநாயகரைத் தொழும் போது அவருடைய உருவம் எம்மைக் கட்டுப்படுத்தி ஆன்மிக ஞானத்தை நல்கி நிற்கும் என்பது நோக்குதற்குரியதாகும். பிள்ளையாருடைய பெரிய தொப்பை வயிறு அனைத்தையும் சேமிக்கும் திறன் கொண்ட கணினியின் சேமிப்புத் தட்டுடன் ஒப்பு நோக்கப்படுகிறது. விநாயகருக்கு விரும்பிய நிவேதனங்களை படையல் செய்யும் வழிபாட்டில் அவற்றை விநாயகர் ஏற்றுக் கொண்டு தன்னுடைய தொப்பை வயிற்றிலே சேமித்து வைப்பார் என்பது கணினியில் தகவல்களை சேமிக்கும் Hard disk உடன் ஒப்புநோக்கப்படுகின்றது. மேலும் தொப்பை வயிறு என்பது அதிக கொள்ளளவை கொள்ள கூடிய தொன்றாக கணினியில் தற்காலத்தில் அதிக அளவு தரவுகளை சேமிக்கக் கூடிய Hard disk உடன் ஒன்றாகப் பார்க்கப்படுகின்றது.

கணபதி தத்துவம் இரண்டு கூறுகளை அடிப்படையாக கொண்டது. ஒன்று பூமி இன்னொன்று விண்வெளி. பூமியானது கணினித்தத்துவத்தில் வன் பொருளோடு தொடர்புபடுத்தப்படுகிறது. நிலையானதாக கண்முன்னே தெரிகின்ற

சடப்பொருளாக பூமியானது வன்பொருளுக்கு(Hard ware) ஒப்பானது. விண்வெளி யானது விநாயகரின் புத்திக் கூர்மையோடு தொடர்புபடுத்தப்படுகிறது. கணினியின் செயலி(Processor) விண்வெளியில் அடையும் அதி உச்ச செயற்திறனை குறித்து நிற்கின்றது.

எமது வேண்டுதல்களையெல்லாம் விநாயகரின் ஒளி பொருந்திய கண்கள், தும்பிக்கை, செவிகளூடாக செவிமடுத்து எமது வேண்டுதல்களை நிறைவேற்றி அடியவர்களுக்கு தன்னுடைய வசீகர திருமுகத்துடன் காட்சி கொடுப்பது கணினியின் (Input -> Process ->output) கொள்கையை தெளிவாக எடுத்தியம்புகின்றது.

கணபதியின் தும்பிக்கையில் உள்ள தண்டு கணினியிலிருந்து விசைப்பலகை மற்றும் சுட்டிவரை நீண்ட கேபிள்(cable) போன்றது. விநாயகரின் இயக்கங்களை சுட்டி கட்டுப்படுத்தியது போலவே, கணினி இடைமுகத்திலும் இயக்கம் சுட்டி மூலம் தீர்மானிக்கப்படுகிறது. விநாயகரின் வாகனமாம் சுண்டெலி, கணினியை கொண்டியக்கும் Mouse, எலியின் பற்கள், கணினி சுட்டி இரண்டு பற்கள் அதாவது இரண்டு பொத்தான்கள் இடப்புறம், வலப்புறம் (கிளிக்குகள் - Clicks) வலது பொத்தானானது அரிதாகப் பயன்படுத்தப்படும் அம்சங்கள் அல்லது விருப்பங்களை கையாள்கிறது. இது பிள்ளையாரின் அரை உடைந்த வலது பல்லுடன் ஒப்பிடலாம். இடது பல் அல்லது பொத்தான் தொடர்ந்து செயற்படும்.

விநாயகரின் செயற்பாடு புலன்களால் வழங்கப்படும் உள்ளீடுகளின் அடிப்படையில் அன்றாட செயற்பாடுகளுக்கான வெளியீட்டை முடிவு செய்து செயல்படுத்த ஒரு நிரலைப்பயன்படுத்துகின்றது. அவர் பேச்சு மற்றும் எண்களைக் கட்டுப்படுத்தி வெற்றிக்கு வழிவகுக்கின்றார். அவர் எல்லாமாக எங்கும் நிறைந்திருக்கின்றார். இன்றைய சர்வதேச நெட்வேர்க் கட்டமைப்பின்மூலம் பல கணினிகள் இணைக்கப்பட்டிருப்பதை குறித்துக் காட்டுகின்றது.

இன்று நமது மூளை செயற்கை நுண்ணறிவை கருத்தரித்து பொதுவான விவாதத்திற்கு கொண்டுவரக்கூடிய திறனை உருவாக்கியுள்ளது. அதே திறனை நமது இயற்கை நுண்ணறிவை நம்முள் உயர்த்துவதற்காக விநாயகர் வழிபாடு இன்றியமையாத தொன்றானது என்றால் அது மிகையாகாது.

செ.சோ.வராகி

# வரசித்தி விநாயகர் கீதம்

“வரங்களின் நாயகனே...
வரசித்தி விநாயகனே...
காத்தருளும் நாயகனே
காத்தவராயவனே...'(2)

அல்வையூர் பதியமரும்
ஆதிசக்தி நாயகனே...
அறம்போல் வாழ்வு தரும்
அற்புத நாயகனே...
தொழுது வரும் அடியோரின்
துயரங்கள் துடைப்பவனே
“மண்டியிட்டு வேண்டுகிறோம்
மண்ணகத்தைக்காருமையா...'(2)

“வரங்களின் நாயகனே...
வரசித்தி விநாயகனே...
காத்தருளும் நாயகனே
காத்தவராயவனே...“(2)

எண்ணிய எண்ணமெலாம்
உன்னிடம் சொல்லி விட்டால்
கண்ணியம் காத்தருள்வாய்
கருணையும் புரிந்திடுவாய்
புண்ணிய வாழ்வுதனை
புனிதமாய் கொடுப்பனே
“கண்ணின் மணி எனவே
காலம் நூறும் காத்தருள்வாய்”(2)

“வரங்களின் நாயகனே...
வரசித்தி விநாயகனே
காத்தருளும் நாயகனே
காத்தவராயவனே“(2)

தினவரவு தரும் எங்கள்
தினகரனின் முகம் கண்டு
உள்ளமொருமனதாகி
உனதடியைப் பணிந்திடவே...
விட்டகுறை தொட்ட கறை அத்தனையும்
விரைந்தோடி மறைந்திடவே
“வேழ முகன் கருணையினால்
(நல்) வினைகள்யாவும்
செழித்திடுமே”(2)

“வரங்களின் நாயகனே...
வரசித்தி விநாயகனே...
காத்தருளும் நாயகனே
காத்தராயவனே...”(2)

வளம் விஞ்சும் உன் பதியில்
எழில் கொஞ்சும் உன்னழகை
காலாதிகாலமதாய் கலைகள்
காக்கும் காவலனே...
வங்கம் ஏறி நீ வந்தாய்
“அலைகள் மோதும் கரையருகில்
அல்வையூர் பதியமர்ந்தாய்”(2)

“வரங்களின் நாயகனே...
வரசித்தி விநாயகனே...
காத்தருளும் நாயகனே...
காத்தவராயவனே...

**வெற்றி துஷ்யந்தன்**

# கீதை காட்டும் மனித வாழ்வு

உபநிடதம், பிரம்ம சூத்திரம், பகவத் கீதை என்பன ”பிரஸ்தான திரயங்கள்” என வழங்கப்படுகின்றன. இவை இந்து சமயத்தின் அடிப்படை நூல்களாகும். இவற்றிலே மிகவும் முதன்மைக்குரிய நூல் ”பகவத் கீதை”. விஷ்ணுவிற்குரிய சிறப்பியல்புகளில் மிக முக்கியமானது, தனது பக்தர்களுக்காக தானே அவதாரமாகத் தோன்றி தர்மத்தைக் காப்பதாக அமைந்துள்ளது. அத்தகைய ஒரு சூழலில் தான் கிருஷ்ண அவதாரமும் நிகழ்ந்தது. பக்திக்கு என்றுமே எளியவனான கிருஷ்ண பரமாத்மாவால் படைக்கப்பட்ட தெய்வீக நூலே ”பகவத் கீதை”. ”கீதை” என்றால் பாடப்பட்டது என்பது பொருள். ”ஸ்ரீமத் பகவத் கீதை” என்பது ஸ்ரீ கிருஷ்ண பகவானால் பாடப்பட்டது என்பது பொருள். யுகங்கள் கோடி வாழ்பவன் கிருஷ்ணன்; யுகங்களுக்கு அந்தமானவன் கிருஷ்ணன்; யுகம் யுகமாய் யுகம் காப்பவன் கிருஷ்ணன். அவன் தனது அவதார நோக்கத்தை ஈடேற்றும் பொருட்டு குருஷேத்திரத்தை நடத்தினான். கீதையையும் படைத்தான். மானுட சமூகத்தை வழிபடுத்தும் பாதையையும் வகுத்தான். போர்முனையில் நின்று கொண்டு தர்ம தத்துவத்தை உரைத்து மனித வாழ்க்கையின் அர்த்தத்தையும் புரிய வைத்தான். 18 அத்தியாயங்களில் வாழ்வின் அனைத்து அம்சங்களையும் தெளிவிக்கும் வல்லமை பெற்றது பகவத் கீதை ஆகும். பகவானின் கூற்றுப் பிரகாரம், வாழ்வில் ஏற்படும் அனேக பிரச்சினைகளுக்கும் நமது தவறான சிந்தனை மட்டுமே காரணம் என்கிறார். சிந்தனையை, எண்ணத்தை மாற்றுவதன் மூலம் பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெறலாம் என்கிறார் கிருஷ்ண பகவான். அதை வருமாறு கூறுகிறார். ”உங்கள் வாழ்வானது உங்கள் எண்ணப்படியே அமையும் எண்ணத்தை எப்போதும் தூய்மையாக வைத்திருங்கள்” என்கிறார். வாழ்வின் எத்தனை இன்னல்கள் ஏற்படினும் அதற்கானத் தீர்வைத் தருவது நமது அறிவு மட்டுமே. எத்தனை கூரிய ஆயுதங்களை கையாளும் திறன் கொண்டிருப்பினும் அறிவு எனும் ஆயுதம் அனைத்தையும் தகர்க்கக் கூடியது. அறிவைத் தேடிச் செல் அறியாமையை அகற்று என்கிறார் பரமாத்மா. நம் வாழ்வு முன்னேறுவதற்கும், வளமாக மாறுவதற்கும் ஒரே வழி சுயநலமின்மையே. எல்லா செயல்களும் ஒவ்வொரு பிரார்த்தனையின் விளைவே. இவ்வுலகில் காரண காரியமின்றி எதுவும் நடைபெறாது. அதை தான் கிருஷ்ணர் வருமாறு கூறுகிறார், ”எல்லாமே ஏதோவொரு காரண காரியத்திற்காக நடக்கிறது; உங்களுக்கு நல்லது நடந்தாலும் ஒரு காரணம் இருக்கின்றது; தீயது நடந்தாலும் ஒரு காரணம் இருக்கின்றது”

என்கிறார். நான் என்ற அகந்தை அனைத்தையும் அழிக்கவல்லது. மனிதனானவன் முதலில் அகந்தையைக் கைவிட்டு மனதினை இறைவழி செலுத்த வேண்டும் என்கிறார். விழிப்புணர்வு என்பது மனிதனுக்கு மிக முக்கியம் என்கிறார். அத்தோடு, எதைக் கற்றுக் கொண்டாயோ அதன் படி வாழப்பழகு என்கிறார் பகவான். யாருக்காகவும், எதற்காகவும் எங்களை நாங்களே மற்ற வேண்டிய தேவை இல்லை. உனது தூய்மையான இலட்சியத்தை நோக்கி துணிவாக நடைபோடு என்கிறார் பகவான். அதை அவர் வருமாறு கூறுகிறார், ”காலங்கள் மாறினாலும், காட்சிகள் மாறினாலும் தான் கொண்ட இலட்சியத்தை மட்டும் மாற்றக்கூடாது” என்கிறார். தவிர, கிடைத்ததைக் கொண்டு சிறப்பாக வாழப்பழகு என்கிறார். எல்லோர் மனமும் இருப்பதை விடுத்து, இல்லாததற்கு தான் அலைமோதும். அவ்வாறான வாழ்க்கையில் எந்தவித பிடிப்புமே இருக்காது. எமக்கென்று இறைவனின் விதிப்பை என்றுமே மாற்ற முடியாது. இறை எமக்குத் தந்ததைக் கொண்டு ஆனந்திக்க வேண்டுமே தவிர, பிற வன்மங்களை அடையக் கூடாது என்கிறார். உனக்குக் கிடைத்தவை அனைத்தும் உனக்காக இறைவன் கொடுத்த வரங்கள். எந்தவொரு இடத்திலும் பகவான் எதையும் துறந்துவிட்டு முன் செல் அர்ச்சுனா எனக் கூறவில்லை. எமது இந்து சமயமும் அதைத் தான் கூறுகிறது. அனைத்தையும் கொண்டு சிறப்பாக வாழ். இறுதியில் உண்மை நிலை அறிந்து இறைவனுடன் ஐக்கியமாகிவிடு என்கிறது. எது உண்மையோ அதை அப்படியே ஏற்கும் பக்குவம் நமக்குத் தேவை. உலக மாயை எது என அறிந்து தெய்வீகத்துடன் இணைய போராடு என்கிறார் கிருஷ்ணர். இவ்வுலக வாழ்வியல் அனைத்தும் மாயையே. அந்த மாயையை வலு குன்றச் செய்வதற்கு தெய்வீகத்திற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்கிறார். அதையே கிருஷ்ணர் கூறுகிறார், நல்லவனாக இருப்பது ஒரு பரிசு; அந்தப் பரிசு எல்லோருக்கும் கிடைத்து விடாது. இறைவனின் பிரிய பக்தனுக்குக் கிடைத்த மானசீக பரிசு. அதனுடன் இவ்வுலகில் வாழ்தல் என்பது குருஷேத்திரத்தை விட வலிமையான போராட்டம். அந்தப் போராட்டத்தில் வெற்றி பெறுபவனின் மகிமையை எப்போதும் இவ்வுலகம் பாடும். “கடமை மூலம் கடவுள்” என்பதே கீதையின் சாரம்சம். ”கடமையைச் செய் பலனை எதிர்பாராதே” என்கிறார் கிருஷ்ணர். உண்மைதான், எது எமது கடமையோ அதைச் செய்வதே ஒரு வழியில் இறையுடன் ஒன்றிக்கும் மார்க்கம் ஆகும். இதனாலேயே கிருஷ்ணர் கூறுகிறார், “தர்மம் என்றென்றும் நிலை பெறவே அவதரிப்பேன் யுகம் யுகமாய்” என்று. கிருஷ்ணரின் அவதார நோக்கம், குருஷேத்திரம் மூலம் இவ்வுலகிற்கு கூற வேண்டிய செய்தி. கீதை வாயிலாக கடவுளும், மனிதனும் யுகம் யுகமாய் பேசிக்கொள்ளும் அற்புத நூல். கண்ணன் காட்டிய வழி என்றென்றும் பேரின்பத்தை தர வல்லது. பகுத்து அறியக் கூடிய மனிதன், இறைவனால் தொகுத்து வழங்கப்பட்ட நூலின் மூலம் நல்வாழ்வு வாழலாம் என்பது திண்ணம்.

அல்வாயூர் சிவ. கணேசன்

# சீர்மேவும் பதி தன்னில் விழாக்காணும் புண்ணியனே!

விருத்தம்

நொச்சிமர நிழல்சூழ, நாதியற்ற நெஞ்சங்கள்
அச்சமின்றி வாழ்ந்திடவே! அந்தணர்கள் அருகமர
இச்செகம் மீதினிலே இடர்யாவும் நீக்கிடவே!
உச்சமாய் தலம் கொண்டு உன்னதம் பெற்றவனே!

பல்லவி

ஆடி வரும் அழகுடனே அலங்காரம்! – உனக்கு
கோடி மலர் தூவியே நம் நமஸ்காரம்.
– ஆடி வரும்

அனுபல்லவி

மாரிபெற்ற பிள்ளையாய் வடிவெடுத்தாய்! – எமக்கு
நேரிடும் துன்பமெலாம் தகர்த்திடுவாய்.
– ஆடி வரும்

சரணங்கள்

குலம்விளங்க உனைவைத்தே பூஜைநிதம் செய்கின்றோம்!
பலமாக அருகிருந்தே பலன் யாவும் தருபவனே!
எந்தவழி சென்றாலும் அங்குமுனை நினைக்கின்றோம்
நொந்துபட்ட காலம் மாற்றி நல்வாழ்வும் ஈய்பவனே!
– ஆடி வரும்

வரசித்தி விநாயகரை உடனுறைய வைத்தவனே!
வேண்டுபவை யாவையுமே நிறைவாக்கி அருள்பவனே!
சிரந்தாழ்த்தி வணங்கிடவே முன்வருங் காத்தவராயனே!
சீர்மேவும் பதிதன்னில் விழாக்காணும் புண்ணியனே!
– ஆடி வரும்

*வரதவேல் மிதுர்ஷா*

# வணங்குதலும் அதன் முறைகளும்

"சைவ மக்களாகிய நாம் தினந்தோறும்
திருக்கோயிலுக்குச் சென்று பயபக்தியுடன் சுவாமி
தரிசனஞ் செய்தல் வேண்டும்"

மனித வாழ்வோடு வணங்குதல் என்பது பின்னிப்பிணைந்துள்ளது. ஒருவருக்கு மரியாதை செலுத்துவதற்கும் பணிவை காட்டுவதற்கும் வணங்குதல் என்பது மிக முக்கியமானது ஆகும். இவ்வணங்குதலை வடமொழியில் "நமஸ் காரம்" என அழைப்பார்கள். ஆலயத்திற்கு சென்றதும் முதலில் திருக்கோபுரத்தை வணங்கி இரண்டு கைகளையும் தலையிலே குவித்துக் கடவுளை மனதில் தியானித்துக் கொண்டே உள்ளே பிரவேசித்து கொடித்தம்பத்திற்கு முன்னால் விழுந்து வணங்க வேண்டும். இவ்வணக்க முறையானது ஏகாங்கம், துவியாங்கம், திரியாங்கம், பஞ்சாங்கம், அஷ்டாங்கம் என ஐந்து வகைப்படும். இவ் வகையான வணக்க முறைகள் பற்றி விரிவாக பார்ப்போம்.

ஏகாங்கம் – தலையை மட்டும் தாழ்த்தி பணிந்து வணங்குதல் வேண்டும் (பெரியவர்களை கண்டால் இவ் வணக்கமே செய்ய வேண்டும்)

துவியாங்கம் – தலையில் வலக்கையை மட்டும் வைத்து வணங்குதல்

திரியாங்கம் – தலையில் இரு கைகளையும் குவித்து வணங்குதல் வேண்டும். (கோபுரத்தைக் கண்டதும் இவ் வணக்கமே செய்தல் வேண்டும்)

பஞ்சாங்கம் – தலை, இருகை, இரு முழங்கால்கள் ஆகிய ஐந்து உறுப்புகள் நிலத்தில் பொருந்த வணங்குதல் வேண்டுதல்

அஷ்டாங்கம் – தலை, இருகை, இருசெவி, இரு புயம், மோவாய் எனும் அங்கங்களும் பொருந்த வணங்குதல் வேண்டும்.

ஏகாங்கம், துவியாங்கம், திரியாங்கம் என்பன இருபாலாரும் செய்யக் கூடியவை ஆகும். பஞ்சாங்கம் பெண்கள் செய்யும் நமஸ்காரம். அஷ்டாங்கம் ஆண்கள் செய்யும் நமஸ்காரம் ஆகும். நமஸ்காரம் செய்யும் போது மேற்கு அல்லது தெற்கில் கால்களை நீட்ட வேண்டும். கொடி மரத்தை கடந்து உள்ளே சென்றால் எந்த இடத்திலும் விழுந்து வணங்குதல் கூடாது. மும்மூர்த்திகளுக்கு சிரசின் மேல் 12 அங்குலம் உயர்த்தியும், ஏனைய தெய்வங்களுக்கு சிரசின் மேல் கூப்பியும் வணங்குதல் வேண்டும். அஷ்டாங்க, பஞ்சாங்க, திரியாங்க நமஸ்காரமானது மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும், ஏழு தரமாயினும், ஒன்பது தரமாயினும், பன்னிரண்டு தரமாயினும் செய்தல் வேண்டும். அபிஷேக காலத்தில் உட்பிரகாரத்திலே நமஸ்காரமானது செய்தல் கூடாது. அஷ்டாங்க நமஸ்காரமானது பகல் 12 மணிக்கு மேல் சூரியன் மறைவதற்கு முன் செய்தல் கூடாது. இவ்வாறான நமஸ்காரணங்களை செய்து முடித்தவுடன் இறைவனை வலம் வருதல் நன்மை பயக்கும்.

# விநாயகரை வழிபடும்போது சொல்ல வேண்டிய மந்திரங்கள்

1. விநாயகர் சகஸ்ரநாமம்:
சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்ப்புஜம்
ப்ரசன்ன வதனம் த்யாயேத் சர்வ விக்நோப சாந்தயே

2. விநாயகர் ஸ்லோகம்:
கஜானனம் பூத கணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பூ பலஸார பக்ஷதம்
உமாஸுதம் சோக வினாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்

3. விநாயகர் ஸ்லோகம்:
ஓம் தத்புருஷாய வித்மஹே
வக்ரதுண்டாய தீமஹி
தன்னோ தந்தி ப்ரசோதயாத்.

4. விநாயகர் ஸ்லோகம்:
ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்து அடி போற்றுகின்றேனே.

5. விநாயகர் ஸ்லோகம்:
மூஷிக வாகன மோதக ஹஸ்த
சாமர கர்ண விளம்பித சூத்ர
வாமன ரூப மஹேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே.

6. விநாயகர் காயத்ரி மந்திரம்:
வக்ரதுண்டாய ஹூம்
ஓம் நமோ ஹேரம்ப மதமோதித

மம சர்வ சங்கடம் நிவாரயே ஸ்வாஹா
ஓம் கம் க்ஷிப்ரப்ரசாதனாய நமஹ.

7. விநாயகர் ஸ்லோகம்:
அல்லல்போம் வல்வினைபோம் அன்னைவயிற்றில் பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம்போம் நல்ல
குணமதிக மாம் அருணைக் கோபுரத்தில் மேவும்
கணபதியைக் கைதொழுதக் கால்.

ஆகியவற்றை தினமும் படித்து அருகம்புல்லால் விநாயகரை வழிபட்டு வந்தால் விநாயகரின் அருள் நமக்குக் கிடைக்கும். பிள்ளையாரை வணங்கி நெற்றியில் குட்டிக் கொண்டு எந்த ஒரு காரியத்தையும் ஆரம்பிக்க வேண்டும்.



# நைவேத்தியம் என்றால் என்ன?

வீடுகளில் அல்லது கோயில்களில் மதச் சடங்குகள் அல்லது பூஜைகள் செய்யும் போது தெய்வங்களுக்கு உணவை நைவேத்தியமாக வைப்பது இந்துக்களின்/இந்து தர்மத்தின் வழக்கமான நடைமுறையாகும். இந்த படையல் நைவேத்தியம் என்று அழைக் கப்படுகிறது. இது ஒரு மனிதனின் உண்மையான மொத்த நிலையை குறிக்கிறது. படையல் வைப்பது ஒரு பூஜையின் கடைசி படியாகும். ஒவ்வொரு நாளும் கடவுளுக்கு என்ன பிரசாதம் வைக்கப்பட வேண்டும் என்பது முன்னதாகவே தீர்மானிக்கப்படுகிறது. ஒவ்வொரு தெய்வத் திற்கும் சில பிடித்தமான உணவுகள் இருப்பதாக சொல்லப்படுகிறது. அதுவே நைவேத்தி யமாகப் படைக்கப்படுகிறது. விஷ்ணுவுக்கு பால் பாயாசமும், கணபதிக்கு மோதகமும், அம்மனுக்கு கூழும் படைக்கப்படுகிறது. குறிப்பிட்ட உணவை குறிப்பிட்ட தெய்வத்திற்கு பிரசாதமாக சமர்ப்பிப்பதன் மூலம் நிறைய நல்ல பலன்களை பெற முடியும். படைத்த நைவேத்தியத்தை தெய்வங்கள் அதை அன்புடன் ஏற்றுக்கொண்ட பிறகு அது பிரசாதம் என்று அழைக்கப்படுகிறது. அதன் பிறகு அனைவரும் சிறு பங்காக எடுத்துக் கொள் கின்றனர். இந்த நைவேத்தியம் பிரசாதமாக அனைவருக்கும் பங்களிக்கப்பட்ட பிறகு, அதில் கடவுளின் சக்தி நிரம்பி அதை சாப்பிடும் அனைவருக்கும் நன்மை அளிப்பதாக நம்பப்படு கிறது. இந்த கட்டுரையில் நைவேத்தியம் படைப்பதன் ஆன்மீக முக்கியத்துவம் மற்றும் இந்த செயலின் பல்வேறு கோணங்களைப் பற்றிய தகவல்களை தருகிறோம்.

நைவேத்தியம் சமைக்கும்போது குறைந்த அளவு காரம், உப்பு மற்றும் எண்ணெயைப் பயன்படுத்த வேண்டும். நெய் போன்ற சாத்வீக பொருட்களை நிறைய பயன்படுத்தலாம். நைவேத்தியத்தை படையல் போட வாழை இலையைப் பயன்படுத்த வேண்டும். கடவுளுக்காக தயாரிக்கப்பட்ட நைவேத்தியத்தில் உப்பை இலையில் பரிமாறக் கூடாது. நைவேத்தியம் படைக்கப்படும் இலையை மூடி வைக்கவும். நைவேத்தியத்தை படைப்பதற்கு முன் இஷ்ட தெய்வத்தை பிரார்த்தனை செய்துக் கொண்டு கடவுள் முன்னால் தரையில் வட்டமாக கோலமிட்டு அதன் பிறகு அந்த கோலத்தின் மீது நைவேத்தியம் அடங்கிய வாழை இலையை பரப்பி வாழை இலையின் காம்புப் பகுதி கடவுள் இருக்கும் திசையை நோக்கி இருக்கும்படியும் நுனிப்பகுதி உங்களை நோக்கி இருக்கும்படியும் வைக்கவும். நைவேத்தியத்தை படைக்கும்போது வாழை இலையை அல்லது பிரசாதத் தட்டைச் சுற்றிலும் வலமிருந்து இடமாக தண்ணீர் தெளிக்க வேண்டும். (இந்த செயல் மண்டலத்தை சுத்தி செய்தல் என்று அறியப்படுகிறது) தண்ணீரை இடமிருந்து வலமாக மீண்டும் தெளிக்கக் கூடாது. எந்தவொரு தெய்வத்திற்கும் நைவேத்தியம் படைக்கும்போது பக்தி பாவத்தோடு இருக்க வேண்டியது மிகவும் முக்கியமாகும். நைவேத்தியம் படைக்கும் பக்தனின் பக்தி பாவம் எந்த அளவுக்கு அதிகமாக இருக்கிறதோ அந்த அளவுக்கு அந்த உணவை தெய்வங் கள் ஏற்றுக்கொள்வதற்கான சாத்தியங்களும் அதிகம். ஒரு நைவேத்தியத்தை படைக்கும் போது அது இறைவனை சென்றடைகிறது என்றும் அதை தெய்வம் ஏற்றுக்கொள்கிறது என்கிற மனோபாவத்துடன் பக்தி சிரத்தைகளுடன் நைவேத்தியத்தை படைக்க வேண்டும்.

## பூச உபயகாரர் விபரம்

தை - சர்வநிதி அனித்தா & 5 ம் திருவிழா உபயகாரர்
மாசி - ஜெகதீஸ்வரன் பிரகதீஸ்வரி
பங்குனி - கமலேந்திரன் கீதாமணி
சித்திரை - சிவபாக்கியம் சிவதாசன்
வைகாசி - கலாமணி குயின்ஜெசிலி & பரணீதரன் விஷ்ணுவர்த்தினி
ஆனி - கலாயினி சத்தியநேசன்
ஆடி - பாரதிதாசன் வசந்தமதி
ஆவணி - நிவேதனன் வித்தியா
புரட்டாதி - பரணீதரன் விஷ்ணுவர்த்தினி(கோயில் தீர்த்தம்)
ஐப்பசி - ஆதவன் துஷ்யந்தி
கார்த்திகை - பிரணவன் வசந்தகுமாரி
மார்கழி - முரளீதரன் லக்ஸ்சனா

## நவராத்திரி உபயகாரர்

1. த.கலாமணி குடும்பம்
2. க.முரளிதரன் குடும்பம்
3. க.கமலேந்திரன் குடும்பம்
4. சீ.இரத்தினேஸ்வரன் குடும்பம்
5. செ.விவேகானந்தன் குடும்பம்
6. க.வரதவேல் குடும்பம்
7. மா.சிவதாசன் குடும்பம்
8. வே.ஜெகதீஸ்வரன் குடும்பம்
9. க.பரணீதரன் குடும்பம்

விஜய தசமி

## திருவெம்பாவை உபயகாரர்

1. வே.தணிகாசலம் குடும்பம், உறவினர்கள்
2. ச.சிவகுரு குடும்பம்
3. க.தம்பித்துரை குடும்பம்
4. க.நற்குணம் குடும்பம்
5. கு.ஸ்ரீஸ்கந்தராஜா குடும்பம்
6. ச.தம்பிஜயா குடும்பம்
7. மா.சிவதாசன் குடும்பம்
8. சு.சீவரத்தினம் குடும்பம், சு.வேலும்மயிலும் குடும்பம்
9. க.கந்தையா குடும்பம்
10. மூ.நாகமுத்து குடும்பம்

**2021 மதில், முன் மேடை, சமையல்கூடம் அமைப்பு செலவும் அன்பளிப்புகளும்**

மொத்த செலவு 129000.00

அன்பளிப்புகள்

1. கலாமணி குயீன்ஜெசிலி - 7500.00
2. கீதாமணி கமலேந்திரன் - 5000.00
3. வ.பர்வதாமணி -5000.00
4. வெற்றிவேல் துஷ்யந்தன் - 6000.00
5. றஜீவன் கிருஷிகா(கனடா) - 12500.00
6. பாரதிதாசன் ஆர்த்திகன் - 2000.00
7. முரளிதரன் லக்ஷனா - 5000.00
8. கோயில் போன வருட மிகுதி(எழுந்தருளி, குதிரை வாகனம் வெள்ளோட்டம் உண்டியல் 5224.00 வேட்டை உண்டியல் 4882.00 உண்டியல் 904.00 மொத்தம் - 11000.00
9. 2020 ஐப்பசி பூசம் - 2021 ஆவணி பூசம் வரை, பூசதினங்களில் அர்ச்சனைக்காசு, ஏடு தொடக்கல் காசு, பொங்கல் காசு, திருநீறு தட்டில்போடும் காசு, கோயில் உண்டியிலில் போடும் காசு மொத்தம் - 14500.00
10. பரணீதரன் விஷ்ணுவர்த்தினி 59500.00

**சு.நிருத்திகன் - சிறுவர் பூங்கா**

கட்டட செலவு 71300.00

அன்பளிப்பு

1. செல்லக்குட்டி கணேசன் - 5000.00
2. சர்வநிதி அனித்தா - 5000.00
3. றுபேஷ் - ஹரிஷ்ணி. ஹனுஸ்ரீ - 5000.00
4. வதிரி சி. ரவீந்திரன் - 5000.00
5. பாரதிதாசன் ஆர்த்திகன் - 1000.00
6. பரணீதரன் விஷ்ணுவர்த்தினி - 50300.00

சறுக்கீஷ் அன்பளிப்பு வினோத் காயத்திரி 50000.00

ஊஞ்சல் அன்பளிப்பு பரணீதரன் விஷ்ணுவர்த்தினி - 25000.00

## 2021 அன்பளிப்புகள் ( 2021.09.02 வரை)

- தண்ணீர் பைப் புனரமைப்புகள் - கு.விநாயகதாஸ், ந.சர்வநிதி
- பிளாஸ்ரிக் 3 வாளி அன்பளிப்பு செ.அட்செயலிங்கம்
- குடை - கலாநிதி -லதா - சுஜா (10000.00)
- அஷ்ட தேவர் - சர்வநிதி அனித்தா (17500.00)
- சீற் புதிய சமையல் கூடம் - செந்தூரன் ராதிகா (10000.00)

- சுந்தரவளைவு (சல்லாரி)- பாரதிதாசன் வசந்தமதி
- நாயின தாளம் - மிதுரன் அபிநயா
- 1 லோட் பழைய கண்டகல் - தவனேஸ்வரன் தர்மஸ்ரீ
- சிறிய பொக்ஸ் பார் கேற் (கோயில் பூங்கா)- ம.சிவகுருநாதன் - 2000.00
- ஜெகதீஸ்வரன் பிரகதீஸ்வரி - 2000.00










